

பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு, கடலூர் கிழக்கு மாவட்டம்,காட்டுமன்னார்கோவில் ஒன்றியம்,முட்டம் கிராமத்தில் தனது இல்லத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், அண்ணா அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் ஓரணியில் தமிழ்நாடு மூலம் கழகத்தில் இணைந்த புதிய உறுப்பினர்களுடன் இணைந்து தமிழகத்தை தலை நிமிர வைப்போம் என்ற தலைப்பில் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன்,ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, ஜெயபாண்டியன், பேரூர் கழக செயலாளர் எஸ்.கணேசமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், முட்டம் கிளை கழக செயலாளர் தாமோதரன், ஆசிரியர் ராமமூர்த்தி, செல்வம், அன்பழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் ஜின்னா திடலில் நடந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அரசியல் எழுச்சி மாநாடு முகம்மது மீரான் முகைதீன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே.எம்.காதர்மொய்தீன்,நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் மைதீன் கான்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல் வஹாப் எம்.எல்.ஏ நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ்,மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ் உள்பட பலர் உள்ளனர்.

### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு ’ திட்டத்தில் 5 லட்சம் உறுப்பினர்கள் இணைப்பு!

## அமைச்சர் ஆர்.காந்தி செய்தியாளர்களிடம் தகவல்!

இராணிப்பேட்டை, செப்.16

இராணிப்பேட்டை மாவட்டத்தில் ’ ஓரணியில் தமிழ்நாடு’ திட்டத்தில் சுமார் 5 லட்சம் உறுப்பினர்கள் இணைந்துள்ளதாக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆர்.காந்தி செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.



ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில்,வாக்குச் சாவடிதோறும் 30 சதவீதம் வாக்காளர்களை தி.மு.க. உறுப்பினர்களாக்கும் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் மதுரையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் அறிவித்தார்.

அதைதொடர்ந்து இந்த உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை கடந்த ஜூலை 1 ஆம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் தொடங்கி வைத்தார். இதற்காக தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி சார்பில், தொகுதிக்கு ஒருவர் என 234 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, உறுப்பினர் பதிவுக்கென தனி செயலியும் உருவாக்கப்பட்டு தமிழகம் முழுவதும் உறுப்பினர் சேர்க்கை திட்ட ம் தொடங்கப்பட்டது.

அதன் படி கடந்த 70 நாட்களில் தமிழகத்தில் 68 ஆயிரம் வாக்குக் சாவடிகளில் சுமார் 1 கோடிக்கும் அதிகமான குடும்பங்கள் இணைந்துள்ளனர்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் 1லட்சத்து 81 ஆயிரத்து 716, குடும்பங்களில், 5 லடசத்து 33 ஆயிரத்து 478 பேர் இணைந்துள்ளனர். இந்த திட்டத்தில் யாரையும் நாங்கள் கட்டாயப்படுத்தி இணைக்கவில்லை, தாமாக முன் வந்து இணைந்துள்ளனர்.

இந்த நிலையில் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதி தமிழகம் முழுவதும் உள்ள வாக்குச்சாவடிகளில் 5 உறுதி மொழிகளை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். அதன் படி 68 ஆயிரம் வாக்குச் சாவடிகளிலும், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 1,122 வாக்குச்சாவடிகளில் உறுதி மொழி எடுத்து ஒன்றிய அரசின் பாராபட்ச நடவடிக்கைகளை மக்களுக்கு எடுத்துச் செல்வதே இதன் நோக்கம் ஆகும் என்றார். தொடர்ந்து 20 மற்றும் 22 ஆகிய தேதிகளில் பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளது.

ஆளும் அரசை பற்றி குறை கூறுவது எளிது, விஜய் போன்றோர் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என குறை கூறுகின்றனர்.

ஆனால் தமிழக முதல்வர் சொல்லாத திட்டங்களான மகளிர் உரிமைத் திட்டம், மகளிருக்கு இலவச பேருந்து திட்டம், மக்களுடன் முதல்வர், காலை உணவுத் திட்டம், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம், தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட முதல்வர் அறிவித்த பல்வேறு திட்டங்களை அண்டை மாநிலங்களில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன என்றார்.

### தருமபுரி மேற்கு மாவட்டக் கழகத்தினர்

# கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் பெருமளவில் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, செப்.16 -

கரூரில் செப்டம்பர் 17 அன்று நடைபெறும் கழகத்தின் முப்பெரும் விழாவில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து, அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 15, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் செப்டம்பர் 16, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 17, ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது. பாவேந்தர் விருது. பேராசிரியர் விருது. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 17 அன்று கரூர் மாநகரத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. முப்பெரும் விழாவில் கழக உடன் பிறப் புக்கள் அனைவரையும் ஒரு சேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன் என்று கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சரு மான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர், வட்டக் கழக. வார்டு கழக, கிளைக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் பங்கேற்று, பொதுமக்களும் அதிக அளவில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


